1980 ஆகஸ்ட் 1]

திரு. சி. கோபால்: முன்சீப் கோர்ட்டுகளில் இந்த மாற்றம் எவ்வளவு காலத்தில் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்தச் சட்டமன்றத்தில் அதற்குச் சட்டம் இயற்ற இருக்கிறோம். இந்த ஆண்டிலேயே நடைமுறைக்குக்கொண்டு வர இருக்கிறோம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் வரையறையை 5,000 ரூபாய் என்று உயர்த்தும்போது அந்த நீதிமன்றங்களுக்கு அதிகமான வழக்குகள் வரக்கூடிய நிலை ஏற்படும். ஏற்கனவே டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் மூன்று நான்கு ஆண்டுகளாக வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, தாலுகாவுக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் தேவை என்ற வகையில் அதை அமல் நடத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே, சொன்னதுபோல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டின் வரையறையை 5,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரை உயர்த்தும்போது மாவட்ட நீதிமன்றங்களின் அப்பலேட் ஜுரிஸ்டிக்ஷன் 30,000 ஆக வருகிறது. மக்கள் உயர்நீதி மன்றத்திற்கு வருகிற பெரும் சுமை குறையவேண்டும், பணச் செலவு குறையவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த மாற்றம் செய்யப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் டிஸ்ட்ரிக் முன்சீப் கோர்ட்டில் வேலை பளு சற்று அதிகமாகும். எந்த அளவுக்கு வேலைப்பளு அதிகரித்திருக்கிறது என்பதை ஆராய ஓராண்டுக்காலம் நடைமுறையில் ஆராய்ந்து தேவையானஅளவுக்கு அதிகமான கோர்ட்டுகளைத் துவங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: இந்த ஐயாயிரம் ரூபாய் வரையறை என்பது 50 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்டது. இன்று ரூபாயின் மதிப்பு குறைந்த நிலையில் அதை உயர்த்தும்போது 15,000த்திற்குப் பதிலாக 20,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உயர்நீதிமன்றத்தின் ஆய்வுக்குழு பத்தாயிரம் என்று இருந்தால் போதும் என்று பரிந்துரை செய்தது. அரசுதான் பண வீக்கத்தின் காரணமாக இந்த அளவு அதாவது பதினைந்தாயிரம் என்று உயர்த்தவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

கூட்டுறவு கணக்குகள் தணிக்கைப் பிரிவு.

*வினா எண். 91—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் இருக்கும் கூட்டுறவு தணிக்கையைத் தனித் துறையாக பிரித்தமைப்பது பற்றி அரசு ஆணை ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அத்தகைய தனித்துறை இயங்க ஆரம்பிக்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவுத் தணிக்கைத் துறை இயக்குநர் விரைவில் நியமிக்கப்பட்டு இத்தனித்துறை விரைவில் செயல்பட துவங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: இதிலே இருக்கிற குறைபாடுகளை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தனி தணிக்கைத் துறையை ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எப்போது முதல் செயலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தணிக்கைத் துறையும் நிர்வாகத்துறையும் தனித்தனியே இயங்குகிறபோது கூட்டுறவுத் துறையில் தூய்மை மலரும் என்ற நோக்கத்தோடுதான் அரசு இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஏற்கெனவே இது குறித்து உத்திரவு போடப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலே, இது நடைமுறைக்கு வரும்.

திரு. ஏ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே தணிக்கைத் துறை, லோக்கல் பண்ட் ஆடிட் டிபார்ட்மெண்டில் சேர்க்கப்படுமா அல்லது தனியாக செயல்படுமா? கூட்டுறவுத்துறையைச் சேர்ந்தவர்கள் இது சம்மந்தமாக நீதி மன்றத்திலே வழக்குப் பதிவு செய்திருப்பதாக அறிகிறேன். அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கூட்டுறவுத் துறையில் நிர்வாகத் துறையும் தணிக்கை துறையும் ஒருங்கிணைந்து செயல்படுகிற முறையிலே ஒரே அமைப்பாகச் செயல்பட்டால் அதைப் பராமரிப்புச் செய்வதிலும், தவறுசெய்தவர்களுக்கு தண்டனை அளிப்பதிலும் பாரபட்சம் காட்டப்படுவது, மனிதாபிமானத்தின் பெயராலே நடவடிக்கை எடுக்கத் தவறிவிடுவது ஆகிய நிலைமைகள் கடந்தகாலத்திலே இருந்த காரணத்தினால்தனித்தனியாக பிரிக்க அரசு முடிவு செய்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட போது தனியாகச் செயல்படுமா என்று கேட்டார்கள். தணிக்கைத் துறையை கூட்டுறவுத் துறையிலிருந்து பிரித்து தனியாக கோவாப்ரேடிவ் ஆடிட் டிபார்ட்மெண்ட் என்று ஏற்படுத்தி நிதித் துறையின் கீழ் கொண்டுவர அரசு முடிவு செய்திருக்கிறது.

1980 ஆகஸ்ட் 1]

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே மூன்று விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் கூட்டுறவுக் கடன்கள் ரத்து என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு 5 ஏக்கருக்கு உட்பட்ட சிறு விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று சொல்லியிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கூட்டுறவுத்துறையிலே உள்ள தணிக்கைத் துறையைப்பற்றி, தாங்கள் விவசாயத்திற்குப் போனால் அந்த அமைச்சர் பதில் சொல்லவேண்டியிருக்கும்.

திரு. அ. செல்வராசன்: ஆளுங்கட்சி உறுப்பினர் மட்டும் அமெரிக்காவுக்கு எல்லாம் போனாரே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை நிறுத்தியாகிவிட்டது. தாங்கள் அமருங்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் கீழ் தணிக்கைத் துறை இல்லாமல் புது அமைப்பாக ஏற்படுத்துவது சிறந்தது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தணிக்கை செய்ததற்குப் பிறகு சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் சான்றிதழ் பெறவேண்டுமென்று சொல்வது தணிக்கைத் துறையையே அவமதிப்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்களிடமிருந்து சான்றிதழ்கள் பெறவேண்டுமென்று உத்திரவு அனுப்பப் பட்டிருக்கிறது. அது சரியல்ல. அதை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: There is vast difference between the qualifications of a Co-operative Auditor and a Chartered Accountant. சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் தனித்திறமை வாய்ந்தவர்கள் அது அகில இந்திய ரீதியில் இருந்து வருகின்ற முறை. மாண்புமிகு உறுப்பினர் ஆடிட்டைப் பொறுத்தவரையில் அது செம்மையாக இருக்க வேண்டுமென்று கருத்துடையவர்களாக இருப்பார்களானால் இந்த முறையின், மூலமாக அது மேலும் செம்மையாக இருக்கும் என்பதால் அதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஈரோட்டில் லேபர் கோர்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 92—திரு கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர்